**செ. கு. எண்: 118** **நாள் :22.06.2014**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 22.6.2014

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தாமலேரிமுத்தூர் கூட்டு ரோடில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தைச் சேர்ந்த (TASMAC) கடையில் விற்பனையாளராகப் பணி புரிந்து வந்த திரு. சிவக்குமார் என்பவர் 4.5.2014 அன்று பணி முடித்து விட்டு ஆண்டியப்பனூர் ரயில்வே தரைவழி பாதை வழியே வீடு திரும்பும் போது சில அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதில், அவர் பலத்த காயமடைந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், ராமாபுரம் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, 5.5.2014 அன்று பாலத்தில் சிமெண்ட் தளம் போடும் பணி மேற்கொள்ளப்பட்டிருந்த சமயத்தில் சிமெண்ட் பலகை சரிந்து விழுந்ததில், அப்போது பணியிலிருந்த நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர் திரு. இளங்கோவன், தொழிலாளர்கள் திரு. ராஜேஷ் பட்டேல், திரு. வேலு, திரு. ராஜி, திரு. வேடியப்பன், திரு. கோட்டீஸ்வரன், திரு. சிங்காரவேலு, திரு. வெங்கடேசன் மற்றும் திரு. தங்கவேலு ஆகிய ஒன்பது நபர்கள் காயமடைந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

சமூக விரோதிகளால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்ற தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தைச் சேர்ந்த (TASMAC) கடையின் விற்பனையாளர் திரு. சிவக்குமாருக்கு 50,000/- ரூபாயும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், ராமாபுரம் கிராமம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுமானப் பணியின் போது சிமெண்ட் பலகை சரிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**